மாதிரி வினாக்களின் தொகுப்பு

பங்குச் சந்தை சகலீதும்

தரம்

11

Mr.N.PIRASANNA

Dip.In.Maths (Merit)
Vivekananda College Colombo
0778794832 / 0754306497 /0758885888

LOTUSSE ACADEMY

www.lkedu.lk

குறிப்புக்கள்:

www.lkedu.lk
PIRASANNA

MATHS UNIT COLLECTION

பங்குகள்,சதவீதம் 11

Name.....

Mr.N.Pirasanna
Dip.In.Teach.Maths(Merit)
077-8794832,075-8885888

LOTUSE ACADEMY 251/1, Jempettah Street, Colombo - 13 T.P.No- 011-2421166 077-9062430

01. A , B என்னும் இரு நிதி நிறுவகங்கள் பணத்தைக் கடனாகக் கொடுக்கும் இரு விதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

நிறுவகம் A

- ஆண்டுதோறும் 18% வட்டி அறவிடப்படுகின்றது.
- குறையும் மீதி முறைக்கு வட்டி கணிக்கப்படுகின்றது.
- கடனையும் வட்டியையும் சம மாதத் தவணைத் தொகைகளாகச் செலுத்த வேண்டும்.

நிறுவகம் B

- ஆண்டுதோறும் 10% வட்டி அறவிடப்படுகின்ற அதே வேளை கூட்டு வட்டி முறைக்கு வட்டி கணிக்கப்படுகின்றது.
- கடனையும் வட்டியையும் குறித்த காலத்தின் இறுதியில் ஒன்றாகச் செலுத்த வேண்டும்.

சமந்த ரூ. 300 000 கடனைப் பெறவேண்டி உள்ளது. அவர் அக்கடனை வட்டியுடன் இரு ஆண்டுகளில் செலுத்தி முடிப்பதற்கு எதிர்பார்க்கின்றார். நிறுவகம் A இலிருந்து கடனைப் பெறும்போது கூடுதலான வட்டியைச் செலுத்த வேண்டுமெனச் சமந்தவின் ஒரு நண்பர் கூறுகின்றார். இரு நிறுவகங்களிலிருந்தும் கடனைப் பெறும்போது செலுத்த வேண்டிய மொத்த வட்டியைக் கண்டு, நண்பனின் கூற்று உண்மை / பொய் எனக் காரணங்களுடன் விளக்குக.

www.lkedu.lk

02. (a) ஒரு வீட்டின் மதிப்பிட்ட வருமானம் ரூ. 48 000 ஆகும். அதற்கான இறைவரியாக ஆண்டுதோறும் 5% பணம் அறவிடப்படுகிறது. ஒரு காலாண்டிற்காகச் செலுத்த வேண்டிய இறை வரியைக் காண்க.

சந்தேகங்கள் தீர்வை வைக்கும் அழைப்பதற்கு அழையுங்கள்: 075 888 5 888, 077 879 4 832

(b) (i) சுனில் ரூ. 60000 ஐ 8% ஆண்டுக் கூட்டு வட்டி வீதத்தை வழங்கும் ஒரு நிறுவகத்தில் வைப்புச் செய்தார். அவ்வாறு வைப்புச் செய்தால், இரு ஆண்டுகளின் இறுதியில் அவருக்குக் கிடைக்கும் மொத்தப் பணத்தைக் காண்க.

(ii) நிறுவகத்தில் வைப்புச் செய்வதற்கு இருந்த பணத்தை ஒரு பங்கிற்கு ரூ. 1.50 வீதம் ஆண்டுப் பங்கிலாபத்தைச் செலுத்தும், ஒரு பங்கின் சந்தை விலை ரூ. 15 ஆன பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு 2 ஆண்டுகளுக்காக ஒரு கம்பனியில் முதலீடு செய்யலாம். அவருக்குக் கூட்டு வட்டிக்குப் பணத்தை முதலீடு செய்வதா அல்லது கம்பனியில் முதலீடு செய்வதா அனுகூலமானது என்பதைக் காரணங்களுடன் காட்டுக.

(iii) மேற்குறித்த பணத்தை அதே கம்பனியில் இரு ஆண்டுகளுக்கு முதலீடு செய்வதால் அவர் பெறும் வருமானச் சதவீதமானது கம்பனி எவ்வளவு பங்கிலாபத்தைச் செலுத்தினால் 30% ஆக இருக்கும்?

www.lkedu.lk

03. a. ரூபா 25 000 ஐ 10% எளிய வட்டிக்குக் கடனாகப் பெற்ற ஒருவர்,

i. $2\frac{1}{2}$ வருடங்களுக்கு செலுத்த வேண்டிய மொத்த எளிய வட்டி எவ்வளவு?

ii. கடனில் இருந்து மீளுவதற்குச் செலுத்த வேண்டிய தொகை எவ்வளவு?

b. சகீதரன் பங்கொன்றின் சந்தைவிலை ரூபா 100 ஆகவுள்ள நிறுவனம் ஒன்றில் ரூபா 72 000 ஐ முதலீடு செய்கிறார். ஒரு பங்கிற்காக ரூபா 4 பங்கிலாபமாக வழங்கப்படுமெனின் வருடமொன்றில் பெறும் வருமானத்தை, முதலிட்ட பணத்தின் சதவீதமாகத் தருக?

c. இந்த ரூபா 72 000 ஐயும் நிறுவனத்தில் முதலீடு செய்யாது, வங்கியொன்றில் நிலையான வைப்பில் இட்டால் கிடைக்கும் வருட வருமானம் இரு மடங்காகும் என அறியக்கிடைத்தது. அவ்வாறெனில் நிலையான வைப்புக்காக வங்கி வழங்கும் ஆண்டு வட்டி வீதம் எவ்வளவு?

04. ரூபா 75000 பெறுமதியான மடிக் கணனியொன்றை முதலில் அப்பெறுமதியின் $\frac{1}{3}$ பங்கை செலுத்தி மீதியை ரூபா 5 412.50 வீதம் 10 சம மாத தவணைக் கட்டணங்களாக செலுத்துவதன் மூலம் வாடகைக் கொள்வனவு முறையில் கொள்வனவு செய்ய முடியும். குறைந்து செல்லும் மீதிக்கே வட்டி கணிக்கப்படுகின்றது.

(i) செலுத்திய மொத்த வட்டி யாது?

(ii) ஆண்டு வட்டி வீதம் யாது?

05.

வங்கி ஒன்றினால் நிலையான முதலீட்டிற்கு ஆண்டுக்கு 15% எளிய வட்டி வழங்கப்படுகிறது

(i) மேற்படி வங்கியில் ரூபா 100 ஐ ஒரு வருடம் நிலையான வைப்பிலிட்டால் கிடைக்கும் வட்டி யாது?

(ii) மேற்படி வங்கியில் ரூபா 25 000 ஐ 2 வருடம் நிலையாக வைப்பிலிட்டால், 2 வருட முடிவில் கிடைக்கும் மொத்தத் தொகை யாது?

(iii) ஒரு தொகைப் பணமானது 3 வருடங்களுக்கு நிலையான வைப்பிலிட்டபோது ரூபா 18 000 வட்டியாகக் கிடைக்கிறது எனின், வைப்பிலிட்ட பணத்தைக் காண்க.

(iv) ரூபா 30 000 ஐ எத்தனை வருடங்களுக்கு நிலையான வைப்பிலிட்டால் ரூபா 9 000 வட்டியாகக் கிடைக்கும்.

(v) ரூபா P ஆனது t வருடங்களுக்கு வைப்பிலிடப்படுகிறது எனின், t வருட முடிவில் கிடைக்கும் முழுத் தொகை $P\left(1+\frac{3t}{20}\right)$ எனக் காட்டுக.

www.lkedu.lk
PIRASANNA

06. (a) குறித்த கம்பனியில் பங்கு ஒன்றின் விலை ரூபா 50 ஆகும். கம்பனியானது வருடமொன்றிற்கு ஒரு பங்கிற்கு ரூபா 2 பங்குலாபமாக வழங்குகின்றது. சரத் இக்கம்பனியின் பங்குகளை வாங்குவதற்கு ரூபா 25 000 முதலீடு செய்கிறார்.

(i) சரத்திற்குக் கிடைக்கும் பங்குகள் எத்தனை?

(ii) சரத்திற்கு பங்குகளுக்காக ஒரு வருடத்தில் கிடைக்கும் பங்குலாபம் எவ்வளவு?

(iii) இக்கம்பனியின் பங்குகளை வைத்திருக்கும் கமலுக்கு ஒரு வருடத்தில் ரூபா 2 500 பங்குலாபம் கிடைக்கின்றது எனின் அவர் இக்கம்பனியில் முதலீடு செய்த பணம் எவ்வளவு?

(b) ஒருவர் 10% கூட்டு வட்டிக்கு ரூபா 50 000 ஐ 2 வருடங்களுக்கு கடனாகப் பெறுகின்றார்.

(i) 2 வருட முடிவில் கடனை அடைப்பதற்கு தேவையான தொகை எவ்வளவு?

(ii) 11% வருடாந்த எளிய வட்டிக்கு, இதே கடனை இதே காலத்திற்குப் பெறுவது இலாபகரமானது என்ற கூற்று உண்மையா? விடைக்கான காரணம் தருக.

www.lkedu.lk

07. சீலன் ரூ. 25 000 ஐ 12 % எளிய வட்டிப்படி இரு வருடத்தில் மீளச் செலுத்தும் ஒப்பந்தத்தில் கடனாகப் பெற்றார்.

(i) சீலன் அப்பணத்தை தனது சிறு வியாபாரத்தில் முதலீடு செய்தார். அவர் முதலாம் வருட இறுதியில் முதலிட்ட பணத்தின் 50 % ஐ இலாபமாகப் பெற்றார் எனின், அவர் பெற்ற இலாபம் யாது?

(ii) கடனுக்கான இரண்டு வருட வட்டியைக் காண்க.

(iii) முதல் வருட இலாபத்தையும், இரண்டாம் வருட இறுதியில் கிடைக்கப் பெறும் இலாபத்தையும் செலுத்துவதன் மூலம் கடனில் இருந்து விடுபட சீலன் எதிர்பார்க்கின்றார். அது நிறைவேற, இரண்டாம் வருட இறுதியில் பெறவேண்டிய இலாபம் எவ்வளவு?

(iv) ஆனால், இரண்டாவது வருடம் இலாபமாக அவருக்கு ரூ. 13 500 மட்டுமே கிடைத்தது. கடனில் இருந்து விடுபட இரண்டு வருடங்களிலும் பெறப்பட்ட மொத்த இலாபத்தைச் செலுத்திய பின் மேலும் எவ்வளவு பணம் செலுத்துவதற்கு மீதியாகவுள்ளது.

08. (a) ஆண்டுக்கு 12% வட்டிவீதத்தை அறவிடும் நிதி நிறுவனம் ஒன்றில் ரூபா 30 000 ஐ குறைந்து செல்லும் நிலுவை முறையின் கீழ் கடனாக பெற்ற ஒருவர் கடனையும் வட்டியையும் 15 சம மாதாந்தக் கட்டணங்களாகச் செலுத்த வேண்டும்.

(i) ஒரு மாதக் கடன் பணம் எவ்வளவு?

(ii) ஒரு மாதக் கடன் பணத்திற்கு செலுத்த வேண்டிய ஒரு மாத வட்டி யாது?

(iii) கடன் தொகைக்காக செலுத்த வேண்டிய மொத்த வட்டி யாது?

(b) ரூபா 25 000 ஐ ஆண்டுக்கு 11% எளிய வட்டிக்கு கடனாகப் பெற்ற ஒருவர் ரூபா 33 250 ஐச் செலுத்தி கடனிலிருந்து விடுபட்டார். அவர் எத்தனை வருடங்களின் பின் கடனிலிருந்து விடுபட்டார் எனக் காண்க.

www.kedu.lk

PIRASANNA

09. குறித்த ஒரு நிதி நிறுவனத்தில் ஆண்டுக்கு 12% எளிய வட்டி வீதப்படி, 3 வருடங்களில் மாதாந்தம் கடனைத் திருப்பிச் செலுத்தும் ஒப்பந்த அடிப்படையில் ரூபா 360 000 ஐ ஒருவர் பெற்றுக்கொண்டார். தவணைக் கட்டணங்கள் சமமான மாதாந்த தவணைக் கட்டணமாக செலுத்தப்படல் வேண்டும்.

(i) வட்டியின்றி மாதாந்தம் செலுத்த வேண்டிய கடன் தொகை யாது?

(ii) 3 வருடங்களில் செலுத்தவேண்டிய மொத்த வட்டி எவ்வளவு?

(iii) இந்த வட்டியும் கடன் தொகையும் சமமாத தவணைகளில் செலுத்தப்படுமாயின் மாதக் கட்டணம் எவ்வளவு?

(iv) பெற்றுக்கொண்ட கடன் தொகையை 2% மாத வட்டிப்படி வேறொரு நிறுவனத்தில் வைப்புச் செய்தால் மாத வட்டி எவ்வளவு?

(v) பெற்றுக்கொண்ட கடன் தொகைக்கான காலப்பகுதி முடியும்போது, வைப்பிலிட்ட பணத்தின் மூலம் பெறப்படும் வட்டி பெற்றுக்கொண்ட கடன் தொகையைவிட அதிகரிக்குமா? உமது விடைக்கான காரணத்தைத் தருக.

www.lkedu.lk

10. ரூபா 30,000 வைப்பிலிடுபவர்களுக்கு பரிசிலாக பெறுமதி வாய்ந்த ஒரு தொகுதி சமையல் உபகரணங்கள் வழங்கப்படும். இதற்காக 6% வருட வட்டி வழங்கப்படும்.

(i) ரூபா 30,000 இற்கு ஒரு வருட முடிவில் கிடைக்கும் வட்டி யாது?

(ii) இதே பணத்தை 15 மாதங்களுக்கு நிலையான வைப்பாக இட்டு முடிவில் மீளப்பெறும் மொத்தத் தொகை யாது?

(iii) மேற்கூறிய ஒரு தொகுதி சமையல் பாத்திரங்களின் பெறுமதி ரூபா 1800 ஆகும். இப் பெறுமதியையும் ஒரு வருடத்திற்கான வட்டியையும் கூட்ட வரும் தொகையை வட்டியாகப் பெறுவதாயின் வங்கி வழங்க வேண்டிய வட்டி வீதம் யாது?

b) வீடு ஒன்றின் மதிப்பிட்ட ஆண்டுப் பெறுமானத்தில் 8% இனை வரியாக பிரதேச சபை அறவிடுகின்றது. காலாண்டு வரியாக ரூபா 1200 வழங்கும் வீடு ஒன்றின் மதிப்பிட்ட ஆண்டுப் பெறுமானம் யாது?

PIRASANNA

11. தொலைக்காட்சி பெட்டி ஒன்று இறக்குமதி செய்யும் போது அதன் பெறுமானத்தில் 55% ஐ சுங்கத் தீர்வையாகக் கொடுத்தல் வேண்டும்

(iv) அவ்வகை தொலைக்காட்சி பெட்டியும் தொடக்கப் பெறுமானம் ரூபா 48,000 ஆகும் சுங்கத் தீர்வையும் உட்பட அதன் பெறுமானம் யாது?

(v) அவ்வகை உபகரணம் ஒன்று சந்தையில் ரூபா 81,600 இற்கு விற்கப்படுகிறது.அதன் தொடக்கப் பெறுமானத்தை காட்டிலும் இவ் விற்பனை விலை எத்தணை சதவீதத்தினால் கூடியதாகும்?

b) ஒருவர் வங்கியிலிருந்து ரூபா 45,000 ஐ கடனாக பெற்றார் அதற்காக 24% ஆண்டு வட்டியை அறவிடும். அதே வேலை முதலையும் வட்டியையும் குறைந்து செல்லும் வட்டி முறையில் 24 சம மாதத் தவணைக் கட்டணங்களில் கொடுத்து முடித்தல் வேண்டும் எனின் அவர் செலுத்தும் மொத்த வட்டி யாது?

12. a) அரச ஊழியர் ஒருவரின் மாதச் சம்பளம் ரூபா 36000/- ஆகும். அவர் 10 மாதச் சம்பளத்தை முற்பணமாகப் பெற்று 18% ஆண்டு வட்டிப்படி 3 வருடங்களில் தவணைக் கட்டணங்களாகச் செலுத்தினார்.

(i) ஒரு மாத கடன் பணத்தைக் கணிக்க.

(ii) ஒரு மாத கடன் பணத்திற்கான ஒரு மாத வட்டியைக் கணிக்க?

(iii) வட்டி கணிக்கப்படும் மாத அலகுகளின் எண்ணிக்கை யாது?

(iv) செலுத்தப்பட வேண்டிய மொத்த வட்டி யாது?

b) பங்கொன்றிற்கு ரூபா 1.50 ஐ பங்கிலாபமாக வழங்கும் கம்பனி ஒன்றின் 5000 பங்குகளை ஒருவர் ரூபா 13.00 படி சந்தை விலையில் வாங்கினார். வருட இறுதியில் சந்தை விலை ரூபா 15.00 ஆக உயர்ந்தது எனின்.

(i) ஒரு வருடத்தில் அவர் பெறும் பங்கு இலாபம் யாது?

(ii) அவருக்குக் கிடைத்த மூலதன இலாபம் எவ்வளவு?

www.lkedu.lk
PIRASANNA

13. (a)

விற்பனை நிலையமொன்றில் 17 000 ரூபாய் பெறுமானமுடைய பொருளொன்றினை விலைக்கு வாங்கும்போது ஆரம்பக் கொடுப்பனவாக ரூபாய் 5 000 இனைச் செலுத்த வேண்டும். எஞ்சிய பணத்திற்காக 18% வருடாந்த வட்டி அறவிடப்படும்.

(i) ஆரம்பக் கொடுப்பனவின் பின்னர் எஞ்சியிருக்கும் கடன் தொகை எவ்வளவு?

(ii) அந்த எஞ்சிய பணத்திற்காக வருடாந்தம் செலுத்தப்படும் வட்டித் தொகை எவ்வளவு?

(iii) அந்த வட்டித் தொகையும் கடன் தொகையும் 12 சமமான மாதத் தவணைகளில் செலுத்தப்பட்டு கடனிலிருந்து விடுபட வேண்டுமெனில் மாதாந்த தவணைக் கட்டணம் எவ்வளவு?

(b) ஆண்டுப் பெறுமதி ரூபாய் 40 000 இனைக் கொண்ட வீடொன்றிற்காக காலாண்டிற்கான பெறுமதியாக ரூபாய் 800 இனை வரிப்பணமாக நகரசபைக்குச் செலுத்த வேண்டும். நகரசபை அறவிடும் ஆண்டு வட்டி வீதம் யாது?

www.lkedu.lk

14. சிறு வியாபாரமாக துணிப்பையை உற்பத்தி செய்யும் சித்ரா , அவருக்கு உற்பத்திக்குச் செலவாகும் பணத்தில் 30% இனை இலாபமாகப் பெறுமாறு அவற்றை சில்லரை வியாபாரிக்கு விற்பனை செய்கிறார். ஒரு பையினது உற்பத்திச் செலவு 140 ரூபாய்கள் எனின்,

(i) சித்ரா துணிப்பை ஒன்றை விற்ற விலையைக் காண்க.

(ii) மாதமொன்றிற்கு 200 பைகள் விற்கப்படுகின்றன எனின் அவரது மாதாந்த வருமானம் (இலாபம்) எவ்வளவு?

(iii) சில்லரை வியாபாரி பையொன்றினை 250 ரூபாய்கள் என விலையைக் குறித்து பாவனையாளருக்கு 225 ரூபாயிற்கு விற்பனை செய்கிறார். அவர் வழங்கிய கழிவினை குறித்த விலையின் சதவீதமாகக் காட்டுக.

(iv) சித்ரா தனது வியாபாரத்திற்காக மாதாந்தம் 3% எளிய வட்டிக்கு வழங்கும் நிறுவனம் ஒன்றில் இருந்து 40000 ரூபாவினை கடன் தொகையாகப் பெற்றுக் கொண்டு சில மாதங்களிளின் பின்னர் மொத்தப் பணமாக 52000 ரூபாவைச் செலுத்திக் கடனில் இருந்து விடுபட்டார். அவர் கடன்பட்டிருந்த காலத்தைக் காண்க.

15.

ரூ. 30 000 ஐக் கொடுத்து ரூ. 150 000 பெறுமானமுள்ள ஒரு மோட்டர்ச் சைக்கிளைக் கொண்டு செல்க. மீதி ரூ. 5625 வீதம் 24 மாதத் தவணைத் தொகைகளில்



(i) மோட்டர்ச் சைக்கிளைக் கொள்வனவு செய்யும்போது ரூ. 30 000 ஐ அடிப்படைக் கொடுப்பனவாகச் செலுத்திய பின்னர் எஞ்சியிருக்கும் கடன் தொகை யாது?

(ii) மாதக் கடன் பகுதி யாது?

(iii) வாடகைக் கொள்வனவு முறைக்குக் கொள்வனவு செய்வதாயின், தவணைத் தொகையாகச் செலுத்தும்போது, மோட்டர்ச் சைக்கிளுக்காக மேலதிகமாகச் செலுத்த நேரிடும் பணம் யாது?

(iv) இம்முறையின் கீழ் அறவிடப்படும் ஆண்டு வட்டி வீதத்தைக் கணிக்க.

(v) மோட்டர்ச் சைக்கிளை உடன் காசிற்குக் கொள்வனவு செய்யும்போது 12% கழிவு கொடுக்கப்படுகின்றது. அப்போது மோட்டர்ச் சைக்கிளின் விற்பனை விலை யாது?

www.lkedu.lk

16. ஒரு குறித்த கட்டடத்தை அதன் உரிமையாளர் 12 மாத வாடகையை ஒரே தடவையில் முற்பணமாகப் பெற்றுக்கொண்டு மாதந்தோறும் ரூ. 10 000 வாடகைக்குக் கொடுக்கின்றார். அவர் பெற்ற பணத்தில் 25% ஐக் கட்டடத்தின் பராமரிப்புச் செலவுகளுக்காகப் பயன்படுத்தி எஞ்சிய பணத்தை 12% ஆண்டு வட்டி கிடைக்கும் ஒரு நிதி நிறுவகத்தில் ஓர் ஆண்டிற்காக வைப்புச் செய்தார்.

(a) (i) கட்டட உரிமையாளர் பெற்ற முற்பணம் எவ்வளவு?

(ii) கட்டடத்தின் பராமரிப்புப் பணிகளுக்காகப் பயன்படுத்திய பணம் எவ்வளவு?

(iii) எஞ்சிய முற்பணத்தை நிதி நிறுவகத்தில் வைப்புச் செய்து ஓர் ஆண்டின் இறுதியில் அவர் பெறும் வட்டியைக் கணிக்க.

PIRASANNA

17. பங்கு ஒன்றின் சந்தை விலை ரூ 40 ஆகவுள்ளதும், வருடத்திற்கு பங்கு ஒன்றிற்கு ரூ 5 பங்கிலாபம் வழங்கும் கம்பனி ஒன்றில் 6 000 பங்குகளை சுமன் என்பவர் கொள்வனவு செய்தார். ஒரு வருட முடிவில் பங்கிலாபத்தைப் பெற்று தனது பங்குகளையும் விற்று மொத்தமாக ரூ 300 000 பெற்றார்.

i. பங்குகளை வாங்குவதற்காக அவர் முதலிட்ட தொகை யாது?

ii. ஒரு வருட முடிவில் பங்குகளிலிருந்து பெற்ற வருமானம் எவ்வளவு?

iii. அவர் தனது பங்கு ஒன்றை விற்றவிலை யாது?

iv. இவ் வியாபாரத்தினால் அவர் அடைந்த மூலதன இலாபம் யாது?

v. அவர் பெற்ற இலாபத்தைச் சதவீதமாகத் தருக.

18. ரூ. 96 000 பெறுமதியான மடிக் கணணி ஒன்றை முதலில் அதன் பெறுமதியின் $\frac{1}{6}$ செலுத்தியும் மீதியை வருட வட்டி 6 % ஆக 20 சமமாத தவணைகளில் செலுத்துவதன் மூலமும் கொள்வனவு செய்ய முடியும்.(குறைந்து செல்லும் மீதிக்கே வட்டி அறவிடப்படும்.)

i. முதலில் செலுத்தும் தொகையைக் காண்க.

ii. மாதம் ஒன்றுக்கான கடன் தொகையைக் காண்க.

iii. மாதம் ஒன்றில் செலுத்தப்பட வேண்டிய வட்டியைக் காண்க.

vi. வட்டி செலுத்தப்பட வேண்டிய மாத அலகுகளின் எண்ணிக்கையைக் காண்க.

v. ஒரு மாத தவணைக்கட்டணம் யாது?

www.kedu.lk

PIRASANNA

19. உடன் பணத்திற்கு கொள்வனவு செய்யும் ரூபா 98 000 பெறுமதியுள்ள தொலைக்காட்சி பெட்டி ஒன்றை தவணைக்கட்டணமாக கொள்வனவு செய்யும் போது ஆரம்பத்தில் ரூபா 8 000 ஐ செலுத்தி எஞ்சிய தொகையை 15 சம மாதத் தவணைக் கட்டணமாக மீளச் செலுத்த வேண்டும். இதற்கு குறைந்து செல்லும் மீதிக்கேற்ப வருடத்திற்கு 18% வட்டி அறவிடப்படுகிறது. செலுத்த வேண்டிய மொத்த வட்டியை கணிப்பதன் மூலம் ஒரு தவணையில் அறவிடப்படும் கட்டணத்தைக் காண்க.

20. ஒருவர் ரூபா 45 000 ஐ ஆண்டு ஒன்றிற்கு 20% எளிய வட்டிப்படி கடனாகப் பெற்றார். இரு ஆண்டுகளின் இறுதியில் கடனிலிருந்து விடுபடுவதற்கு செலுத்த வேண்டிய மொத்தத் தொகை யாது? இதே பணத்தை ஆண்டு ஒன்றிற்கு 20% வீதம் கூட்டுவட்டிப் படி கடனாகப் பெற்றிருப்பின் 2 ஆண்டுகளின் முடிவில் செலுத்த வேண்டிய மொத்தத் தொகை யாது? மேலே தரப்பட்டுள்ள இரு முறைகளில் எம்முறையில் கடன் பெறுவது இலாபகரமானது என்பதை காரணத்துடன் விளக்குக.

www.lkedu.lk
PIRASANNA

21. ஒரு பங்கிற்கு ஆண்டுப் பங்கிலாபம் ரூ 6 ஐச் செலுத்தும் கம்பனி A யின் சந்தை விலை ரூ 50 ஆகவுள்ள பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு முகுந்தன் ரூ 50000 முதலீடு செய்கின்றார்.

i. முகுந்தனுக்கு ஓர் ஆண்டின் இருதியில் கிடைத்த வருமானம் யாது?

ஒரு வருட முடிவில் சந்தை விலை ரூ 60 ஆக உள்ள போது முகுந்தன் இப் பங்குகளை விற்பனை செய்கின்றார். பங்குகளை விற்றுப் பெற்ற பணத்தையும் கம்பனி A வழங்கிய வருமானத்தையும் பங்கு ஒன்றிற்கு ரூ 7 பங்கிலாபம் வழங்கும் கம்பனி B யில் முதலீடு செய்கின்றார். ஆண்டுப் பங்கிலாப வருமானமாக ரூ 7700 ஐ கம்பனி B அவருக்கு வழங்கியது.

ii. கம்பனி A யின் பங்குகளை விற்பதால் பெறும் மூலதன இலாபம் எவ்வளவு?

iii. கம்பனி B யிலிருந்து வாங்கிய பங்குகள் எத்தனை?

iv. முகுந்தன் ரூ 66 000 பணத்தை கம்பனி B யில் முதலிடுவதற்குப் பதிலாக ஆண்டுக்கு 10% கூட்டு வட்டி வழங்கும் வங்கி ஒன்றில் 2 வருட காலத்திற்கு வைப்பிலிட உத்தேசித்திருப்பின், இரண்டு வருட கால முடிவில் வங்கியில் வைப்புச் செய்வதா? கம்பனி B இன் பங்குகளில் முதலீடு செய்வதா? அனுகூலமானது என்பதை காரணங்களுடன் காட்டுக.

www.lkedu.lk

PIRASANNA